1972 மார்ச் 15].

மாயூரம் அரசு மருத்துவ மனையில் தண்ணீர் தட்டுப்பாடு

* 507 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப் பாட்டைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள குழாய்களின் வழியாக இந்த அரசு மருத்துவமனைக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, பொதுவாக, மருந்தகங்கள், மருத்துவமனைகளில் தண்ணீரும் மின்சாரமும் மிக அவசியமானதாக இருக் கின்றன. ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கிற மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் இந்த வசதி இல்லாத இடங்களில் ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா? அரசு இத்தகைய திட்டத்தை தயாரித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மருத்துவமனைக்கு நிச்சயமாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்தான் மிக அவசியமாகும். ஒரு நகரத் திற்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறபோது அந்த நகரத்திற்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கிற மருத்துவ மனைக்கு அந்த நகரத்திறகுக் கிடைக்கிற பாதுகாக்கப்பட்ட தண்ணீரிலிருந்து கிளைக்குழாய்கள் மூலமாக தண்ணீர் கிடைத்தாகவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மாயூரத்தைப் பொறுத்தவரையில் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக என்று தனியாகத் திட்டம் செய்வதாக இருந்தால் மிகப் பெரிய செலவும் ஆகும், அது ஏற்புடைய தும் அல்ல.

மணல்மேட்டிலுள்ள அரசு மருந்தகம்

* 508 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி மணல்மேட்டில் உள்ள அரசினர் மருந்தகத்திற்கு மின் சார வசதி செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் தொகுதியில் உள்ள மணல்மேட்டிலுள்ள அரசினர் மருந்தகத்திற்கு மின்சார வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று பல ஆண்டுகளாக தொடர்புடைய அதிகாரிகளிடத்திலே கோரிக்கைகள் விடுத்தும் நிறைவேற்றப்படாத நிலைமை இருக்கிறது. குறைந்த அளவுக்குத் தான் 400 ரூபாய் 500 ரூபாய் அளவிலேதான் செலவாகின்ற நிலை இருப்பதால் இந்தக் காரியத்தை உடனடியாகச் செய்வதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மின்சார வசதி அங்கே வழங்கப்பட வேண்டுமென்று சுகாதார இலாகா இயக்குநர் பொறியியல் துறை இயக்குநருக்கு தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். இந்த வேலை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறியப்படுகிறது.

பிச்சைக்காரர் விடுதிகள்

* 509 **வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது பிச்சைக்காரர் விடுதிகள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தமிழகத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பிச்சைக்காரர் விடுதிகள் இயங்கி வருகின்றன :

(1) அரசுக்காப்பு முகாம், மேலப்பாக்கம் (சென்னை அருகில்).

(2) அரசுக்காப்பு முகாம், காஞ்சீபுரம்.

(3) பிச்சைக்காரர் விடுதி, கிருஷ்ணாம்பேட்டை (மாநகராட்சியால் பேணப்பட்டு வருகிறது).

(4) பிச்சைக்காரர் விடுதி, செங்கல்பட்டு.

(5) பிச்சைக்காரர் விடுதி, விருதுநகர்.

(6) பிச்சைக்காரர் விடுதி, திருச்சிராப்பள்ளி.

(7) பிச்சைக்காரர் விடுதி, கோயம்புத்தூர்.

(8) பிச்சைக்காரர் விடுதி, மதுரை.

(9) பிச்சைக்காரர் விடுதி, நாகர்கோவில்.

(10) பிச்சைக்காரர் விடுதி, சீர்காழி.

(11) காப்பு முகாம், சிதம்பரம்.

(12) தயாசதன், ஓட்டேரி (தனியார் நிறுவனம்).